செய்தி வெளியீடு எண்:018 நாள் :11.01.2016

**மழை வெள்ளத்தினால் பாதிப்படைந்த நெடுஞ்சாலைத்துறை சாலைகள் சீரமைப்பு (11.01.2016 அன்றைய நிலவரம்)**

1. மழை வெள்ளத்தினால் சேதமடைந்த சாலை மற்றும் பாலங்களை சீரமைக்க, ஒரு விரிவான செயல்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் 2626 கி.மீ. சாலைகள், 143 தரைபாலம் மற்றும் சிறுபாலங்கள் சீரமைப்புப் பணிகளுக்காகவும், 119 மண் சரிவு இடங்களில் பாதுகாப்பு கட்டமைப்புகளுக்காகவும் ரூ.150 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்த நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றி இதுவரை 417 கி.மீ. சாலைகள் (குறிப்பாக திருவள்ளூர் கோட்டத்தில் 92 கி.மீ. சாலைகள், கடலூர் கோட்டத்தில் 48 கி.மீ. சாலைகள் மற்றும் செங்கல்பட்டு கோட்டத்தில் 36 கி.மீ. சாலைகள்) சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும் துறைப் பணியாளர்களைப் பயன்படுத்தி 2672 கி.மீ. சாலைகள் (குறிப்பாக திருவள்ளூர் கோட்டத்தில் 418 கி.மீ. சாலைகள், கடலூர் கோட்டத்தில் 398 கி.மீ சாலைகள், செங்கல்பட்டு கோட்டத்தில் 318 கி.மீ. சாலைகள் மற்றும் விழுப்புரம் கோட்டத்தில் 215 கி.மீ. சாலைகள்) சீரமைக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தமாக சேதம் அடைந்த சாலைகளில் 40% சீர்செய்யப்பட்டுள்ளது.
2. சேதமடைந்த சாலைகளில் 1358 கி.மீ. சாலைகளை 18.01.2016–க்குள்ளாகவும், 1587 கி.மீ. சாலைகளை 25.01.2016–க்குள்ளாகவும் மீதமுள்ள 2002 கி.மீ. சாலைகளை 31.01.2016–க்குள்ளாகவும் சீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக அனைத்து சாலை சீரமைப்புப் பணிகளையும் 31.01.2016–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள 143 தரைப்பாலங்கள் / சிறுபாலங்களில் இதுவரை 54 தரைப்பாலங்கள் / சிறுபாலங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. 18.01.2016–க்குள் 20 இடங்களிலும் 25.01.2016–க்குள் 14 இடங்களிலும் 31.01.2016–க்குள் 48 இடங்களிலும் தரைப்பாலங்கள் / சிறுபாலங்கள் சீரமைக்கப்படும். 7 பெரிய தரைபாலப்பணிகள் மட்டும் பிப்ரவரி 2016–ல் முடிக்கப்படும். நிலச்சரிவு ஏற்பட்ட 119 இடங்களில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன இவை 31.01.2016–க்குள் முடிக்கப்படும்.

4. மேலும், திருவள்ளூர் மாவட்டத்தில் கனகம்மாசத்திரம் – தக்கோலம் சாலையில் உள்ள மூழ்கு பாலம் 24.11.2015–ல் சேதமடைந்தது. 28.12.2015 வரை வெள்ளம் சென்ற நிலையில், 29.12.2015 அன்று தற்காலிக தரைப்பாலம் அமைக்கும் பணி துவங்கப்பட்டது. 25 வரிசையில் குழாய்கள் பதிக்கும் பணி நிறைவுற்று புதன்கிழமை (13.01.2016) அன்று போக்குவரத்துக்கு திறந்துவிடப்படவுள்ளது. இப்பணிக்கு 15,500 மணல் மூட்டைகளை அடுக்குவதற்காக 100 பணியாளர்கள், 2 பொக்லைன் மற்றும் 1 ஜே.சி.பி. இயந்திரம் ஆகியவை 10 நாட்களுக்கு பயன்படுத்தப்பட்டது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9